பக்கங்கள். ஆறு

யாழ்ப்பாணம் Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 31 ஞாயிற்றுக்கிழமை (13-06-1993) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர் 197

# சர்வசன வாக்கெடுப்பு முடிவு நிலைமையைச் சிக்கலாக்கும்

## யுத்த நிறுத்தமின்றி பிரச்சினையை தீர்க்க முடியாது என எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 13

கிழக்கை வடக்குடன் இணைக்க வேண்டுமா என்பதனை முடிவு செய்வதற்காக கிழக்கில் மட்டும் சர்வசன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற ஆலோசனை, இனப்பிரச்சினை விவகாரத்தை மேலும் சிக்கலடையச் செய்யும் என்று அரசியல் அவதானிகள் எச்சரித்துள்ளனர்.

கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படினும் கூட, யுத்த நிறுத்தம் செய்யாமல் அதற்கான சூழ்நிலையை உருவாக்காமல் இப்போதைய பிரச்சினையை தீர்வுக்குக் கொண்டு வந்து சமாதானத்தை உருவாக்க முடியாது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

1990 போர் தொடங்கிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

கிளாலிக் கடற்பரப்பில்

## மக்களை காக்கும் பணியில் ஈடுபட்ட புலிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 13

நேற்று முன்தினம் இரவு கிளாலிக் கடற்பரப்பில் மக்கள் போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த சமயம், அவர்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இரு புலி வீரர்கள் வீரச்சாவு அடைந்தனர்.

கடற்புலி லெப்டினன்ட்கேர்ணல் புலேந்திரன் அல்லது சார்ள்ஸ் (ஆனந்தராஜா தவராஜா — திருக்கடலூர், திருமலை). கடற்புலி லெப்டினன்ட் மகான் (நவரத்தினம் தவராஜா — சாளம்பைக்குளம், வவுனியா) ஆகிய இருவருமே வீரச்சாவு அடைந்தவர்கள் ஆவர்.

நேற்று முன்தினம் இரவு 7 மணி முதல் 9 மணி வரை நடந்த கடற்போரில் ஸ்ரீலங்கா கடற்படையினருக்கும் பெரும் இழப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

## குடாநாட்டு மக்கள் அஞ்சலி

கிளாலிக் கடற்பரப்பில் மக்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தவேளை வீரச்சாவடைந்த கடற்புலி லெப்டினன்ட் கேர்ணல் புலேந்திரன், கடற்புலி லெப்டினன்ட் மகான் ஆகியோரது புகழுடல்கள் இன்றும் நாளையும் குடாநாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

இன்று அச்சுவேலி, சுன்னாகம், குருநகர், கைதடி, கொடிகாமம், கிளாலி ஆகிய இடங்களிலும்—

நாளை செம்பியன்பற்று, நாகர்கோவில், நெல்லியடி, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலும் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். அங்கு அஞ்சலிக் கூட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

பிரேமதாச கொலைச் சம்பவம்:

## ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவில் ஏ. எஸ். பி., சார்ஜன்ட் கைது!

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலை தொடர்பாக ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றிய உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் (ஏ எஸ். பி.) ஒருவரும் அவரது சாரதியான சார்ஜன்ட் ஒருவரும் அவசர காலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

பிரேமதாசாவின் தனிப்பட்ட உதவியாளரான மொஹிதீனுடன் மேற்படி ஏ. எஸ். பி. நெருங்கிய தொடர்புடையவர் என்று கருதப்படுகிறது.

கைது செய்யப்பட்டுள்ள ஏ எஸ். பி. மற்றும் சாரதி ஆகியோருக்கு தற்கொலைப் படை வீரருடன் இருந்த தொடர்புகள் குறித்து தற்பொழுது விசாரணை நடைபெற்று வருவதாக பொலீஸ் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ஒ-6)

கடற்காற்று ராணுவ நடவடிக்கை:

## மட்டக்களப்புப் பகுதிக்கு ஹமில்டன் விஜயம்

மட்டக்களப்பு வாழைச்சேனைக்கு வடக்கே கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான ''கடற்காற்று'' (முஹுது சுலங்) இராணுவ நடவடிக்கைக்காக அங்கு பிறப்பிக்கப்பட்டிருந்த காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் நேற்று நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இராணுவ நடவடிக்கை இடம்பெற்ற பகுதிகளை நேற்று கூடுப்படைகள் தளபதி ஹமில்டன் வனசிங்க பார்வையிட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

படையினர் தாம் கைப்பற்றிய பகுதிகளில் முகாம்களை அமைக்கும் வேலையில் ஈடுபட்டிருப்பதாக கிழக்குப் பிராந்திய தளபதி லக்கி அல்கம தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையில் படையினர் தரப்பில் மூவர் கொல்லப்பட்டனர் என்றும், பலர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

எதிர்க்கட்சிகளுக்கு முக்கியத்துவம்!

## பிரேமாவை விட விஜேதுங்க மிகவும் வித்தியாசமானவர்

### பிரபல பத்திரிகையாளர் கருத்து

கொழும்பு, ஜூன் 13

தாம் பிரேமதாசாவை விட வித்தியாசமானவர் என்பதை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தனது நடவடிக்கைகள் மூலம் காண்பித்து வருகிறார் என பத்திரிகையாளரான விக்ரர் ஐவன் பி. பி. ஸிக்குத் தெரிவித்தார்.

அமைச்சர்களுக்கு, மீண்டும் அதிகாரங்கள், பணத்தை வீண்விரயம் செய்யும் திட்டங்களைக் கைவிடல், ஒளி, — ஒலி பரப்புக் கூட்டுத்தாபனங்கள், பத்திரிகைகளுக்கு கூடுதல் சுதந்திரம், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஏரிக்கரைப் பத்திரிகைகளில் எதிரணிச் செய்திகளுக்கும் கூடுதலான இடம், ஆகியவை மூலம் பிரேமதாசவில் இருந்து தாம் வேறுபட்டவர் என்பதை ஜனாதிபதி விஜேதுங்க காண்பித்து வருகின்றார்.

பிரேமதாசாவின் ஆதரவாளர்களான அரசாங்க அதிகாரிகள் பதவி மாற்றம் செய்யப்பட்டிருப்பதால் ஜனாதிபதி விஜேதுங்கா மீது பிரேமதாச குடும்பம் வெறுப்படைந்துள்ளது என்று பத்திரிகையாளரான விக்ரர் ஐவன் பி. பி. ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

தமது ஆதரவின்றி ஜனாதிபதி விஜேதுங்காவினால் எதனையும் செய்ய முடியாது என்று பிரேமதாச ஆதரவாளர்கள் கருதினர். ஆனால் அவர்களின் ஆதரவைப் பெறாமலேயே ஜனாதிபதி விஜேதுங்க பல நடவடிக்கைகளை எடுத்துள்ளார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-6)

## கதிரவெளி மோதலில் 5 புலிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 13

கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்புப் பகுதியில் ஆரம்பமான ''முஹுது சுலங்'' இராணுவ நடவடிக்கைகளின் போது, கதிரவெளியில் விடுதலைப் புலிகள் படையினருடன் கடுமையாக மோதினர்.

கதிரவெளிப் பகுதியைப் படையினர் சுற்றிவளைக்க முயன்றபோது, அவர்களுடன் இடம்பெற்ற கடும் சண்டையில் ஐந்து விடுதலைப் புலிகளும் ஆதரவாளர் ஒருவரும் வீரச்சாவு அடைந்தனர்.

வியாழன் காலை 6-45 மணியளவில் இடம்பெற்ற இந்த மோதல்களின் போது படையினருக்கும் இழப்புக்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

லெப். இளமாறன் அல்லது ரமணி (மார்க்கண்டு குலசீலன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

சர்வதேச நாணய நிதியம் நிர்ப்பந்தம்:

## பொருள்களின் திடீர் விலை உயர்வு! எதிரணிக்கு சாதகமாக அமையும்

### பி. பி. ஸி. கருத்து

கொழும்பு, ஜூன் 13

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 45 [illegible] டொலர் கடனைப் பெறுவதற்காக —

ஐ. தே. க. அரசு அதன் நிர்ப்பந்தங்களுக்கு பணிந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் அரசு, மக்களின் தேவைக்கு அதிகமாகப் பயன்படும் பொருள்கள், சேவைகளுக்கு அறவிடப்படும் கட்டணங்களில் திடீர் உயர்வுகளை ஏற்படுத்தி வருகிறது.

அண்மையில் மண்ணெண்ணெய் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. அதே சமயம் மின் கட்டணமும் அதிகரிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் தீர்வு ஒன்றுக்கு மக்களை தயார் செய்வோம்

## மலேசிய ஆயர் செல்வநாயகம்

யாழ்ப்பாணம், ஜூன் 3

இனப்பிரச்சினைக்கு இறுதி முடிவு அரசியல் தீர்வாகும் அதற்கேற்ப மக்களின் மனதை தயார் செய்வதே சமாதானக் குழுவின் நோக்கமாகும்.

மலேசிய ஆயர் மேதகு அன்ரனி செல்வநாயகம் முன்கண்டவாறு கடந்த வியாழக்கிழமை செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வருவதற்கு முன் கொழும்பில் நாம் பலரைச் சந்தித்தோம். எல்லோரும் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்றே கேட்டுக் கொண்டார்கள்.

வடக்கு – தெற்கு பகுதிகளுக்கு இடையே நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்துவதும் சமாதானக் குழுவின் நோக்கமாகும்.

சமூகத்தின் பல பிரிவினரையும் நாம் சந்தித்தோம். அவர்களிடமிருந்து பல தகவல்களை நாம் திரட்டியுள்ளோம். திரட்டப்பட்ட தகவல்கள் எமக்கு ஊக்கமளிப்பனவாக உள்ளன.

மக்களிடமிருந்து தான் தீர்வு வேண்டும். மக்களின் அபிலாஷைகள் சுயகௌரவம் வாய்ந்த முறையில் நிறைவேற்றப்படக் கூடியதாக சமாதானம் அமைய வேண்டும். சமாதான முயற்சி ஒரு சவாலாக அமைந்துள்ளது

வெளியில் இருந்து நாம் அறிந்து கொண்ட விடயங்களுக்கு வேறாக இங்கு வந்து நாம் அறிந்து கொண்ட விடயங்கள் உள்ளன. யதார்த்த நிலையை உணர்ந்து கொள்ள வேண்டும் — என்றார்.

(அ-எ-3)

# விவசாய ஆலோசகர் பதவி நூறுவெற்றிடங்கள் உள்ளன

கொழும்பு, ஜூன் 13

விவசாய ஆலோசகர் பதவிக்கு நூறு வெற்றிடங்கள் உள்ளன. இவை விரைவில் நிரப்பப்படவுள்ளன.

விவசாய டிப்ளோமா பட்டம் பெற்றவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

விவசாய ஆராய்ச்சித்துறை அமைச்சர் தர்மதாச பண்டா முன்கண்டவாறு நேற்று முன்தினம் தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

(த-எ)

# விதை தானியங்களின் கொள்வனவுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 13

எதிர்வரும் பெரும் போகத்திற்குத் தேவைப்படும் விதைப் தானியங்களை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

குறிப்பாக விதை உருளைக் கிழங்கு நெல் என்பன கொழும்பில் இருந்து தருவிக்கப்பட உள்ளன.

விதை தானியங்கள் தேவைப்படும் விவசாயிகள் அது தொடர்பான விண்ணப்பங்களை அவ் அப்பகுதி கமநல சேவை நிலையங்களில் சமர்ப்பிக்கலாம் என்று அறிவிக்கப்படுகின்றது.

(த-162)


# கண்ணீர் அஞ்சலி

திரு. கா. ஆறுமுகராஜா B. Com

(ஆசிரியர்)

''கடமையே கண்ணாக இருந்தாய்
உடைமைகளை துச்சமாக மதித்தாய்
சுடலை வரை கல்வி என்று கற்றாய்
உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்''

மானிப்பாய் இந்து கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(கி/5313)



# ஆத்ம சாந்திக்கிரியை அழைப்பு



அமரர் நாகலிங்கம் நடராசா

சங்கரத்தை

நிகழும் ஸ்ரீமுக ஆண்டு சித்திரைத் திங்கள் 31ஆம் நாள் (13 – 5 - 93) வியாழக்கிழமை இறைநிழலடைந்த அமரர் நாகலிங்கம் நடராசா அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் (இன்று) 13 – 6 – 93 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அவ்வமயம் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

'' அன்பே சிவம் ''

இங்ஙனம்
அன்னாரின் குடும்பத்தினர்

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

(6257)


# இன்று

தமிழ் சோதிடர் ஒன்றியம் வாராந்தம் நடத்தும் சோதிட கலந்துரையாடல் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றியப் பணிமனையில் நடைபெறும் நிகழ்ச்சியில் சோதிடர் வ. க. சாம்பசிவன் ''திருமண பிரச்சினைகள்'' என்ற பொருளில் உரையாற்றுவார். (த-க)

o o o

ஆவரங்கால் விவசாயிகள் நடத்தும் மாட்டுவண்டிச் சவாரி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆவரங்கால் சவாரி மைதானத்தில் நடைபெறும்.

(க 89)

o o o

நல்லூர் மத்திய மறுமலர்ச்சிக்கழகம், ஸ்புட்னிக் விளையாட்டுக் கழகம் ஆகியன இணைந்து நடத்தும் கலை விழா இன்று மாலை 5 30 மணி முதல் நல்லூர் மங்கயர்க்கரசி வித்தியாசாலை மைதான அரங்கில் நடைபெறும்.

யாழ். மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

யாழ் அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகவும் —

நல்லூர் பிரதேச செயலாளர் திரு. ஆ. மகாலிங்கம், யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா, தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு ச நெடுஞ்செழியன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் பங்குபற்றுவர்.

பரதநாட்டியம், கண்ணகி வழக்குரை — நாட்டுக்கூத்து, களத்தில் காத்தான் — சிந்துநடைக் கூத்து மற்றும் இன்னிசை நிகழ்வு ஆகியன கலை விழாவில் இடம்பெறும்.

(உ)

# கணித பாட செயலமர்வு

1991, 92 ஆம் ஆண்டுகளில் ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் கணித பாடத்தில் சித்தி பெறாததால் உயர் வகுப்பு அனுமதி பெற முடியாத நிலையில் இருக்கும் மாணவர்களுக்கான கணித பாட விசேட செயலமர்வு நாளை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது

யாழ். மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையத்தில் ஆரம்பமாக இருக்கும் அந்தச் செயலமர்வில், கலந்து கொள்ள ஏற்கனவே நேரிலும், தபால் மூலமும் விண்ணப்பித்த மாணவர்களை நாளைய செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது

செயலமர்வில் ஆர்வமுடைய பெற்றோர்களும் கலந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது

(உ-5)

# ஆலயங்களில்

பளை தம்பகாமம் தெணியாய் அம்மன் கோவில் வருடாந்த பொங்கல் உற்சவம் இன்று ஞாயிறு நடைபெறும்.

(த-117)

# தென்மாகாண ஆளுநராக மீண்டும் பாக்கீர்

கொழும்பு, ஜூன் 13

தென் மாகாண சபையின் ஆளுநராக மேலும் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு முன்னாள் சபாநாயகர் பாக்கீர் மாக்கார் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

நேற்று ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா முன்னிலையில் அவர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக தென்மாகாண ஆளுநராகச் செயற்பட்ட பாக்கீர் மாக்காரின் முதலாவது பதவிக் காலம் முடிவுற்றதை அடுத்து மீண்டும் இந்த ஆளுநர் பதவிக்கு அவர் நியமிக்கப்பட்டார்.

# ராமதாஸ் கட்சி மீது தடை; மூப்பனார் ஆதரிக்கவில்லை!

சென்னை, ஜூன் 13

தடை செய்யப்பட்டுள்ள விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசிவரும் பாட்டாளி மக்கள் கட்சியை தடைசெய்ய வேண்டும் என்ற கோரிக்கையைத் தாம் ஆதரிக்கவில்லை என்று இந்திரா காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ஜி. கே. மூப்பனார் தெரிவித்தார்.

ஒரு கட்சியைத் தடை செய்வதன் மூலம் எந்த ஒரு பிரச்சினையையும் தீர்த்து விட முடியாது என்றும் அவர் சொன்னார். (த-எ)

# அ.தி.மு.க.அரசை கலைத்தால் அது புலிகள் நடமாட உதவும்

## மாநில அமைச்சர் கூறுகிறார்

சென்னை, ஜூன் 13

தமிழகத்தில் அ தி மு க. அரசைக் கலைத்தால் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் தான் இங்கு அதிகரிக்கும்.

மாநில அமைச்சர் திரு. தென்னவன் முன்கண்டவாறு கூறினார்.

அப்போது காங்கிரஸ்காரர்கள் வெளியில் சுதந்திரமாக நடமாட முடியாத நிலை தான் ஏற்படும் என்றும் துப்பாக்கிச் சத்தம் தான் கேட்கும் என்றும் அவர் கூறினார்.

இப்படி கருத்து வெளியிட்டதற்காக அமைச்சர் தென்னவன் மீது முதலமைச்சர் ஜெயலலிதா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்திரா காங்கிரஸ் மாநிலச் செயலாளர் தண்டாயுதபாணி கேட்டுக் கொண்டார்.

(த-எ)

# அரிசி, வெங்காயம், உழுந்து இறக்குமதி முற்றாகத் தடை

அரிசி, வெங்காயம், மிளகாய் மற்றும் உழுந்து ஆகியனவற்றின் இறக்குமதி அடுத்த ஆண்டில் முற்றாக தடை செய்யப்படும்.

விவசாயத்துறை ஆராய்ச்சி அமைச்சர் தர்மதாஸ பண்டா முன்கண்டவாறு தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் சோளம், பூடு ஆகியனவற்றின் இறக்குமதி தடை செய்யப்படும். பால்மா வகைகளின் இறக்குமதி அடுத்த பத்தாண்டுகளில் தடைசெய்யப்படும்.

உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். மாகாண சபைகளும் இது விஷயத்தில் உதவும் என்றும் அவர் சொன்னார். (த-எ)

# 11,000 பாடசாலைகளில் விவசாயக் கழகங்கள்

## ஒரே நாளில் அமைக்கப்படும்

கொழும்பு ஜூன் 13

பதினொராயிரம் பாடசாலைகளில் 11 ஆயிரம் விவசாய கழகங்கள் ஒரே நாளில் அமைக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

40 லட்சம் மாணவர்களும், பாடசாலை அதிபர்களும், விவசாயம் போதிக்கும் ஆசிரியர்களும் இக் கழகங்களில் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

எதிர்வரும் அக்டோபர் 14 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரையிலான விவசாய வாரத்தின் இறுதி நாளில் இவ் விவசாயக் கழகங்கள் அமைக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விவசாய அபிவிருத்தி அதிகாரசபை இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.


சங்கானை ஜுப்பிற்றர் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும்

Dr. எஸ். ராஜேந்திரம் ஞாபகார்த்த

# வருடாந்த சுற்றுப் போட்டிகள் — 1993

1. மென்பந்து கிரிக்கெட் போட்டி (7 பேர், 12 ஓவர்)
2. வலைப் பந்தாட்டம்
3. கரப்பந்தாட்டம் (ஓவர் கேம்)

குறிப்பு:- போட்டிகள் யாவும் விலகல் முறையில் அமையும்

விண்ணப்ப முடிவுத் திகதி:— 20 06 – 1993

விண்ணப்பம் கையளிக்கும் இடங்கள்:—

1. அர்ச்சுனா நகை மாளிகை, யாழ்ப்பாணம்.
2. மிது வீடியோ மூவிஸ், சங்கானை.

— நிர்வாகம்

(26083)



# இடமாற்றம்

54A, நவீன சந்தையில் இயங்கி வந்த KRISHNA TEX தற்பொழுது வாடிக்கையாளர்களின் நலன் கருதி கீழ்வரும் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கிருஸ்ணா ரெக்ஸ்

இல. 164, நவீன சந்தை,
ஷண் றெக்கோடிங் ஸ்பொட் அருகில்
யாழ்ப்பாணம்.

(6256)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



### செல்வன் பா. சுதர்சன்
(சுதா)

கோப்பாய் காளிகோவிலடியில் வசிக்கும் பாலச்சந்திரன் (சண்முகா) ரஞ்சனா தம்பதிகளின் செல்வப் புதல்வன் சுதர்சன் (சுதா) இன்று (13-06-1993) ஞாயிற்றுக்கிழமை கோப்பாயில் உள்ள தனது இல்லத்தில் முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்தி, மாமாமார், அக்காமார், அண்ணாமார் அனைவரும் காளி அம்பாள் திருவருளால் பல்கலையும் பெற்று, பல்லாண்டு காலம் வாழ்கவென இறைவனிடம் வேண்டி வாழ்த்துகின்றனர்.

''ரஞ்சனா அகம்''
கோப்பாய். (6252)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி ரஜினி பாலசிங்கம்
(சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி)

மலர்வு: 27 — 05 — 1969
உதிர்வு: 31 — 05 — 1986
திதி: 13 — 06 — 1993

ஆண்டுகள் ஏழு சென்றனவே
உன் நினைவென்றும் அகன்றதில்லையே
நிகழ்வுகளின் நினைவுகளில் நிதமும் உன் நினைவு
நித்தம் எம்மை உருக்கும் நீங்காதுன்-
சிந்தனைகள்
நீ பிரிந்து வருடங்கள் ஏழாகலாம் ஆனால் எம்
இதயங்களில் என்றும் நீ வாழ்கிறாயம்மா!
வேதனைகள் சோதனைகளை தாங்கி நிதமிங்கு
வெந்து கொண்டிருக்குதம்மா எங்களிதயங்கள்
நீ எம்முடன் வாழ்ந்த அந்தப் பசுமையான-
நாட்களே
நீங்காமல் பரிதவிக்கும் எங்களுக்கு இதமளிக்கும்.

உன் பிரிவால் துயருறும்;
தாய், தந்தை, தம்பி,
உற்றார், உறவினர்கள்,
தி. பாலசிங்கம்,
(ரஜினி கிறீம் ஹவுஸ்)

35, குருசோ வீதி.
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். (26079)

இனி வரும் காலங்களில்

# தபால் பொதிகள் எடுத்து வருவதில் தாமதம் ஏற்படாது

## என்கிறார் பிரதி அஞ்சல் அதிபர் நாயகம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

எதிர்வரும் காலங்களில் பருத்தித்துறை வந்தடையும் கப்பல்களில் தபால் பொதிகள் தாமதமின்றி எடுத்து வரப்படும். அதேபோல் இங்கிருந்து எடுத்துச் செல்லப்படும் தபால் பொதிகள் உடனடியாக இறக்கப்பட்டு விநியோகிக்கப்படும்.

கொழும்பு சென்று திரும்பிய வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. எஸ். எம். சேதுகாவலர் இத்தகவலைத் தெரிவித்தார்.

தபால் பொதிகளை கொழும்புத் துறைமுகப் பகுதியில் ஏற்றுவதற்கு துறைமுக அதிகாரசபைக்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை தபால் திணைக்களம் கட்டுவதில் ஏற்பட்ட தாமதத்தினாலேயே தபால் போக்குவரத்தில் தடங்கல்கள் ஏற்பட்டதாக அவர் சொன்னார்.

ஆனால் தற்போது இதற்குரிய முற்பணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், எனவே தபால் பொதிகள் வந்து சேர்வதில் தாமதம் ஏற்படாது என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை —

இராணுவத்தினர் மேற்கொள்ளும் சோதனை நடவடிக்கைகளினால் தாமதம் ஏற்பட்டால் அது தவிர்க்க முடியாததாகும் என்றும் அவர் சொன்னார். (த-162)

## மாநகரசபை அந்தஸ்து

கொழும்பு, ஜூன் 13

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுரப் பகுதிக்கு மாநகர சபை அந்தஸ்து வழங்கும் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

## ரணில் தலைமையில் குழு

கொழும்பு, ஜூன் 13

பிரெஞ்சுத் தலைநகர் பாரிஸில் இம்மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்ளும் இலங்கை அரசுத் தூதுக் குழுவுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமை வகிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளர் ஹரோல்ட் ஹேரத் அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை வெளியிட்டார். (ஓ எ)

## வியன்னா பயணம்!

வியன்னா, ஜூன் 13

தற்காலப் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி சர்வதேச மட்டத்தில் ஆஸ்திரியத் தலைநகர் வியன்னாவில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் இலங்கையில் இருந்து பிரபல சிங்கள பாடகி நந்தா மாலினி கலந்து கொள்கிறார்.

உலகில் பல நாடுகளில் இருந்தும் சுமார் 2 ஆயிரம் பெண்கள் கலந்து கொள்ளும் அந்தக் கலந்துரையாடலின் நாட்டின் வடபகுதியில் நடைபெறும் யுத்தம் பற்றி உலகிற்குத் தெரியப்படுத்துவதே தனது முக்கிய நோக்கமாக இருக்கும் என்று பாடகி நந்தா மாலினி தெரிவித்தார். (த-5-6)

## 100 அடி உயர புகை போக்கி மீது உண்ணா விரதம்!

கொழும்பு, ஜூன் 13

இரத்மலானையில் ஏ. பீ. எம். நிறுவனத்தின் 100 அடி உயரமான புகை போக்கி மீது இருந்தவாறு, அந்நிறுவனத்தின் ஊழியர் ஒருவர் சாகும் வரையான உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

தம்மையும், சகாக்கள் நால்வரையும் வேலையில் இருந்து நீக்கியதற்கு ஆட்சேபம் தெரிவித்தே றேமண்ட் பெரேரா (55 வயது) என்ற [illegible] இவ்வுண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளார். [ஓ-6]

நல்லூர் மத்திய
மறுமலர்ச்சிக் கழகம்
ஸ்புட்னிக் விளையாட்டுக் கழகம்
ஆகியன இணைந்து நடத்தும்

## ★ கலைவிழா ★

இடம்: நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியா சாலை மைதான அரங்கு
காலம்: 13 — 06 — 1993 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 5 - 30 மணி

விழாத்தலைவர்: திரு வே. பொ. பாலசிங்கம்
ஆணையாளர், யாழ். மாநகரசபை

பிரதம விருந்தினர்:
உயர்திரு கா. மாணிக்கவாசகர்
அரசாங்க அதிபரும், மாவட்ட ஆணையாளரும், யாழ்ப்பாணம்.

சிறப்பு விருந்தினர்கள்:
திரு. ஆ. மகாலிங்கம்
பிரதேசச் செயலாளர், மேலதிக அரசாங்க அதிபர், நல்லூர்.
திரு. சுந்தரம் டிவகலாலா
உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்.
திரு. ச. நெடுஞ்செழியன்
பொறுப்பாளர், த வி.பு. கலை,பண்பாட்டுக் கழகம், யாழ். மாவட்டம்,

### நிகழ்ச்சி நிரல்

- மங்கள விளக்கேற்றல்;
- வரவேற்புரை; கழகத்தலைவர் திரு. வ. க. ஞானச்செல்வம் (ஜெகநாதன்)
- தலைமையுரை;
- ஆசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் நல்லை ஆதீனம்
- வாழ்த்துரை: திருமதி சத்தியலட்சுமி காங்கேயன் அதிபர் யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை
- கழக அமைப்பாளர் உரை: திரு. க. விவேகானந்தன்
- சிறப்பு விருந்தினர்கள் உரை:
- பிரதம விருந்தினர் உரை:
- நன்றியுரை: கழக பொதுச் செயலாளர்

### கலை நிகழ்ச்சிகள்

பரதநாட்டியம்: செல்வி வாசுகி ஞானச்செல்வம்
நட்டுவாங்கம்: இராஜதுரை நளாயினி
பாட்டு; செல்வன் வர்ண ராமேஸ்வரன்
மிருதங்கம்: சங்கீதரத்தினம் சி. மகேந்திரன்
வயலின்: செல்வி பாக்கியலட்சுமி நடராசா
சங்கீத வித்துவான்

செல்லையா மெற்றாஸ்மயில் நெறியாள்கையில்
★ கண்ணகி வழக்குரை ★
— முல்லைத்தீவு பாங்கு ஆட்டநாட்டுக் கூத்து —

த. வி. பு. கலை, பண்பாட்டுக் கழகம் வழங்கும்
★ களத்தில் காத்தான் ★
சிந்து நடைக் கூத்து

ஈழநல்லூர் 'மண்டலேஸ்வரன்' குழுவினர் வழங்கும்
★ இன்னிசை வார்ப்புகள் ★

அரங்கமைப்பு: றூலின்ஸ் நிறுவனம், நல்லூர்
ஒளி: மனோலைற்ஸ், கோப்பாய்
ஒலி: றோயல் சவுண்ஸ், அரியாலை
மேடை அலங்காரம்: ஸ்ரனிஸ் மாஸ்ரர், யாழ்ப்பாணம்

அன்பளிப்பு; 100/- 50/- 25/- 15/-
சிறுவர்களுக்கு: 10/-

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
— நிர்வாகிகள்.

வாழ்த்துகிறோம்:
யாழ். நகரில் பொறியியல் வேலைகளுக்கு பிரசித்தி பெற்று விளங்கும்
புறோமோட்டஸ் என்ஜினியறிங் கொம்பனி லிமிட்டெட்,
நல்லூர், யாழ்ப்பாணம். (26080)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பழைய றலி சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: வே. செல்லத்துரை, நாகலிங்க சுவாமிகள் வீதி, சங்கானை. (26039)

பாடசாலை அலுவலக உபகரணங்களை பெற்றுக்கொள்ள, சுரேகா புத்தகக் களஞ்சியம், இல. 25, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (6250)

உரும்பராய் தெற்கில் 3 பரப்பு காணியும், வீடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல: 908, மே பா உதயன். (6244)

கிற்றார் (Guitar), கட்டில் ஆகியன உடன் விற்பனைக்கு உண்டு. இல: 71, றக்கா றோட், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (26069)

## தேவை

எலக்ரோணிக் தொழில்நுட்ப வேலைகள் பழக விரும்புபவர்களும், வீடியோ படப்பிடிப்பு, பாடல் பதிவு, T. V. Radio திருத்துவதிலும் தொழில் தெரிந்தவர்களும், பழகவிரும்புபவர்களும் நேரில் விண்ணப்பிக்கவும். முன்பு விண்ணப்பித்தவர்களும் தொடர்பு கொள்ளவும்: நியூ விக்ரேஸ் எலக்ரோணிக் கொம்பிளெக்ஸ், B. M. C. ஒழுங்கை, யாழ்ப்பாணம். (6251)

## (O/L) MATHS

புலமைப் பரிசில் வகுப்பிலிருந்து O/L வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 26 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் ஆரம்ப அறிவிலிருந்து Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லே.ரகேந்திரா வீதி, சுண்டிக்குளி. (26077)

## குளிர்பானங்கள்

Sunrise குளிர்பானங்கள், சோடியல்கள், சுத்தமானவை சுவையானவை பருகிக் களிப்படைவீர். தயாரிப்பு: விநியோகம்: Siva Industries, 35/3, Colombogam Road, Chundikuli. (சி-5307)

## மணப்பெண்கள் தேவை

வயது 33, நட்சத்திரம் பூரம் லண்டனில் உள்ள எலக்ரோனிக் எஞ்ஜினியருக்கும், வயது 29, நட்சத்திரம் ரேவதி சுவிஸில் வேலை பார்க்கும் தற்பொழுது இவ்விடம் வந்துள்ள மணமகனுக்கு மணப்பெண்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்: செ. விசயரத்தினம், இலட்சுமி திருமண சேவை, நவாலி கிழக்கு, நவாலி. (26057)

## இடமாற்றம்

இதுவரை காலமாக 32, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த புனிதா நகை மாளிகை 04-06-1993 முதல் 239, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (6245)

## வெளிவந்துவிட்டது

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (S.L.A.S.) க. பொ. த. (உயர்தர) தேர்வுக்குரியது. ஆக்கியோன்: D. Sam. கிடைக்கும் இடங்கள்: புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் (யாழ்.), ஸெஃபாரிஸ், சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில், பாரதி கல்வி நிலையம், சித்தன்கேணி. (26051)

## ஜோதிட விஞ்ஞானம்

சனி வக்கிர ஆரம்பம் விற்பனையாகின்றது. பகவான் ஸ்ரீசத்யசாயிபாபா, அவதரித்தபோது புதன், வெள்ளி, சூரியன், சனி, வியாழன் ஆயுள் ஸ்தானத்தை நோக்கியபடியால், ஆயுள் பலமடைந்து 96 வயதில் (2021 ஆம் ஆண்டில்) சமாதியடைவார். தற்போது 68 வயதில் அஷ்டமத்துச் சனி. (சத்யா, கட்டுடை)

---

ஆனைக்கோட்டை அருள்மிகு
மூத்த நயினார் ஆலய

## மஹோற்சவ கால அருளுரை

நிகழ்த்துபவர்

திரு. ஆறு. திருமுருகன் B. A.
ஆசிரியர், ஸ்கந்தவரோதயா கல்லூரி,
கம்பன் கழகப் பேச்சாளர்

விடயம்:— பெரியபுராணம்

காலம்:— 05—06—1993 ⟶ 21—06—1993

- ஆலய இணை முகாமையாளர்கள்

(6255)

---

# முக்கிய அறிவித்தல்

யாழ். மாவட்டத்தில் மென்பானம், இனிப்பு வகை, ஜாம் ஆகியவற்றை தயாரித்து சந்தைப்படுத்துவதில் ஈடுபட்டிருக்கும் சகல உற்பத்தியாளர்களையும் இம் மாதம் 17ஆம் திகதிக்கு முன்பாக இல. 230, இராமநாதன் வீதியில் (பல்கலைக்கழகத்திற்கு அருகில்) அமைந்துள்ள தொழில் துறை மேம்பாட்டு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

- தொழில்துறை மேம்பாட்டு நிறுவனம்.

(சி-5249)

---

## யாழ்ப்பாணக் கல்லூரி

வட்டுக்கோட்டை

## பட்டப்படிப்புகள் பிரிவு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

* G. A. Q. — 1994 (முதற் கலைத்தேர்வு) வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

பேராதனைப் பல்கலைக்கழகம்

* B. A. — 1994 ஏப்ரல் (கலைமாணி) வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
* G. A. Q. — 1993 ஆகஸ்ட் மாதிரிப் பரீட்சைகள் ஆரம்பமாகின்றன.

**காலம்: 14 - 06 - 1993**

திங்கட்கிழமை பிற்பகல் 3மணி

பதிவுகளுக்கு முந்திக் கொள்ளவும்.

முதல்வர்,
யாழ்ப்பாணக் கல்லூரி.

(சி-5253)

---

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 13 — 01 — 1967

உதிர்வு: 13 — 06 — 1989

### செல்வன் நியூமன் சவரிமுத்து

ஆண்டுகளோ நான்கு அசைந்தசைந்து நகர்ந்தாலும்
எழில் கொழிக்கும் அன்புமுகம் எம் நினைவில்
நெஞ்சை அழுத்தியதாய் நெடுநாட்கள் வாழுமடா
ஊழிவரை அழியாது ஊஞ்சலாய் ஆடுமடா.

உமது பிரிவால் துயருறும்:
தந்தை, தாய், சகோதரிகள்,
மாமன்மார், மாமிமார்,
மச்சான்மார், மச்சான்மார் மற்றும்
உறவினர், நண்பர்கள்.

12/2, மடம் வீதி,
யாழ்ப்பாணம். [26068]

---

உ
சிவமயம்

## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீமுக வருடம் வைகாசி மாதம் 32ஆம் நாள் (14 - 06 - 1993) திங்கட்கிழமை கிருஸ்ணபட்ச தசமி திதியும் ரேவதி நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் பகல் 12-10 தொடக்கம் 1-30 வரையுள்ள
★ சுபமுகூர்த்த வேளையில் ★

| எமது புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>**கிரிதரன்**<br>அவர்களுக்கும் | எமது ஏகபுத்திரி<br>திருநிறை செல்வி<br>**சிவபுரத்தரசி**<br>அவர்களுக்கும் |
|---|---|

சட்டநாதர் வீதியிலுள்ள இளம் கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் நடைபெறும் திருமண வைபவத்துக்கு தாங்கள், தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறும் அதன் பின்னர் நடைபெறும் மதிய போசன விருந்தில் கலந்து சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி. என். கே. பத்மநாதன்,
(நாதஸ்வர கானகலாநிதி)
199/4, கில்னர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

திருமதி. வே இரத்தினகோபால்,
(யாழ். கில்னர் மகாமாரி-
அம்மன் கோவில் ஆதீனகர்த்தா)
185/9, கில்னர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

★ இருவீட்டார் அழைப்பு ★

குறிப்பு: இதனையே தனிப்பட்ட அழைப்பிதழாகக் கொள்ளவும்.

6254)

---

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 29 — 05 — 1968

அந்நியன் அழிப்பு: 13 — 06 — 1989

அமரர்

### கிருஷ்ணபிள்ளை ஜெயானந்தன்

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி, மீளாத்துயில் கொண்ட எங்கள் குடும்ப ஒளிவிளக்கே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

— குடும்பத்தினர்.

ராஜ வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (சி-5237)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

## உதயன்

## தெரிவுக் குழுவின் அற்பத்தனம்

தமிழர் பிரச்சினைக்குரிய தீர்வுத் திட்டம் ஒன்றை வகுப்பதற்கு முன்னர், வடக்கு-கிழக்கு இணைப்பு விவகாரத்துக்கு ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டும். அதற்காக, வடக்குடன் கிழக்கு இணைந்திருப்பதை, கிழக்கு மக்கள் விரும்புகிறார்களா இல்லையா என்பதனைக் கண்டறியும் பொருட்டு, கிழக்கிலங்கையில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்த வேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வழிவகைகளை கண்டறிவதற்கு நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு இப்படி ஒரு முடிவை மேற்கொண்டிருக்கிறது!

இப்போது இணைந்திருக்கும் வடக்கு—கிழக்கை இரண்டாகப் பிரித்து அவற்றுக்கு சமஷ்டி அலகுகளை உருவாக்குவது என்று தெரிவுக்குழு ஒருதலைப்பட்சமாக முடிவு செய்ததைத் தொடர்ந்து தமிழ்க் கட்சிகள் அந்தக்குழுவைப் பகிஷ்கரித்து வருகின்றன. அவ்வாறிருக்க மீண்டும் ஒருதலைப்பட்சமாக கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது!

பொதுவான நடைமுறை விதிப்படி, தமிழர் கட்சிகளின் சம்மதமில்லாத மேற்சொன்ன இரண்டு முடிவுகளுமே செல்லுபடியாகா. சிங்களக்கட்சிகள் தாம் தமக்கிடையே செய்து கொண்ட ஒருதலைப்பட்ச— ஒருபக்க—சிங்களத் தரப்பு முடிவே இது.

சிங்களவர்களின் தீர்வைத் தமிழர்கள் மீது திணிப்பதற்குப் பெயர் தான் சமாதான முறையிலான அரசியல் தீர்வா? இத்தகைய ஒருதலைப்பட்ச முடிவுகளைச் செய்வதற்கு தெரிவுக்குழு என்ற பெயரில் ஒரு குழுவும் தேவைதானா?

வடக்கு-கிழக்கு பல நூற்றாண்டுகளாக ஒரே தொடர் நிலப்பரப்பாக உள்ள தமிழர் தாயகம். அதனைப் பிரித்து கிழக்கைத் தாம் விழுங்கி விடுவதற்காக பௌத்த-சிங்களப் பேரினவாதம் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக முயன்று வருகிறது. அதன் பொருட்டு காலத்துக்குக் காலம் பலவிதமான முயற்சிகளை பல வடிவங்களில் மேற்கொள்கிறது. திட்டமிட்ட வகையில் உள்ளார்ந்த உன்மத்த நோக்கத்துடன் செயற்பட்டு வருகிறது.

அதன் உச்சக்கட்டமாக, இணைப்பு-பிரிப்பு என்ற புதிய நிலைப்பாட்டை வெற்றிகரமாகப் புகுத்தியவர் ஜே. ஆர். தான்! ஆனால் அவர் பிதாமகராக இருந்து பெற்றெடுத்த இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் மூலம் கூட கடந்த 5 வருடங்களாக அதனைச் சாதிக்க முடியவில்லை. அந்தத் தோல்வியை ஈடு செய்யும் வகையில், மீண்டும் அதற்குப் புத்துயிர் கொடுக்கும் வகையில் துட்டத்தனமாக நடக்க முயல்கிறது தெரிவுக்குழு.

சமரசமும் சமாதானமும் செய்துவைக்கவரும் நடுவுநிலையாளர்கள் பிணக்குக்குரியோரை சேர்த்து வைக்க முயல வேண்டுமேயன்றி, பிரித்து வைப்பதற்கு அல்ல. ஆனால் மங்கள முனசிங்காவும் அவரது சிங்களத் தெரிவுக்குழுவும் பல நூற்றாண்டு காலத்துத் தமிழர் தாயகத்தைப் சந்தர்ப்பம் பார்த்துப் பிரித்துவிட முயல்வது துரோகம் நிறைந்த அதர்மமாகும்.

இனப்பிரச்சினைக்குரிய தீர்வு ஒன்றை வகுக்க முடியவில்லை எனின், மங்கள முனசிங்கவும் அவரது தெரிவுக்குழுவும் உண்மையைக் கூறி, தோல்வியை ஒப்புக்கொண்டு ராஜினாமாச் செய்து கலைந்து போவதே உரியவழி. அதனைவிட்டு தமிழரின் பாரம்பரிய சொத்தை அபகரிக்கும் போக்கிரித்தனத்துக்குத் தலைமை வகித்து நிற்பது அற்பத்தனமாகும்!

### வெள்ளி இரவு மோதல் நடந்த போதிலும்

# நூற்றுக்கணக்கானோர் கிளாலியை கடந்து வந்தனர்

யாழ்ப்பாணம், ஜூன் 13

நேற்று முன்தினம் வெள்ளி இரவு கிளாலிக் கடலில் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் மோதல் இடம் பெற்ற போதிலும் பூநகரி, கிளிநொச்சிப் பகுதியில் தங்கியிருந்த நூற்றுக்கணக்கான பயணிகள் இப்பாதையூடாக நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர்.

இதேவேளை நேற்றும் படகுச்சேவை இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருந்ததால் நேற்று யாழ். பஸ் தரிப்பு நிலையத்தில் ஏராளமானோர் கிளாலி செல்வதற்காகக் கூடி நின்றதை அவதானிக்க முடிந்தது.

மேலும் நூற்றுக்கணக்கானோர் யாழ்ப்பாணம் வருவதற்காக கிளிநொச்சி, பூநகரிப் பகுதிகளில் காத்திருப்பதாகவும் நேற்று இரவு படகுச் சேவை நடைபெறும் பட்சத்தில் அவர்களும் இன்று காலை யாழ்ப்பாணம் வந்து சேர்வார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

படகுச் சேவை இன்று நடைபெறாது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-17-162)

## மீண்டும் ரத்ஸன்ஜானி

கொழும்பு, ஜூன் 13

ஈரானில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் தற்போதைய ஜனாதிபதியான அக்பர்ஹஸானி ரத்ஸன்ஜானி வெற்றியீட்டியிருப்பதாக ஆரம்பக் கட்ட தேர்தல் முடிவுகள் தெரிவிக்கின்றன. உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

# மேலும் 4,000 புத்தகங்கள் மாநகரசபை நூலகத்திற்கு!

## குமண கப்பலில் வந்து சேரும்

அடுத்து பருத்தித்துறைக்கு வந்து சேரவுள்ள குமண கப்பலில் யாழ். மாநகரசபை பிரதம நூலகத்திற்கு 4 ஆயிரம் புத்தகங்கள் எடுத்து வரப்படவுள்ளன.

கணக்கியல், பொறியியல், மருத்துவம் ஆகிய துறை சார்ந்த புத்தகங்களும் இவற்றில் அடங்குகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கு முன்னரும் கப்பல் மூலம் நன்கொடையாக வழங்கப்பட்ட இரண்டாயிரம் புத்தகங்கள் கொண்டுவரப்பட்டிருந்தன. யாழ். மாநகரசபையின் ஆறு நூலகங்களிலும் தற்போது மொத்தமாக அறுபதினாயிரம் புத்தகங்கள் கைபிருப்பில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-162)

## கேள்விப்பத்திரம் கோராமல்

# பாடசாலை அபி. சபைகளுக்கு அரச ஒப்பந்த வேலைகள்

கொழும்பு, ஜூன் 13

10 லட்சம் ரூபாவுக்கு உட்பட்ட அரசாங்க ஒப்பந்த வேலைகளை கேள்விப் பத்திரங்களைக் கோராமலேயே பாடசாலை அபிவிருத்தி சபைகள் இனிமேல் மேற்கொள்ளலாம்.

இதற்கான அனுமதியை வழங்குவது என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பாடசாலை அபிவிருத்திச் சபைகளுக்கு வருமானத்தைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் அரசாங்கம் இம்முடிவை எடுத்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

கல்வி உயர் கல்வி அமைச்சு இதற்கான சிபார்சைச் செய்துள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை ஏற்கனவே பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் விநியோகிக்கப்பட்டுள்ளன' (உ-த)

### ஈழ அகதிகளுக்கு எதிராக செயற்பட்ட

# டென்மார்க்கின் முன்னாள் நிதியமைச்சர் மீது வழக்கு

கொபன்ஹேகன், ஜூன் 13

டென்மார்க்கில் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு எதிராகச் செயற்பட்ட முன்னாள் நீதித்துறை அமைச்சர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வது என டென்மார்க் நாடாளுமன்றம் தீர்மானித்துள்ளது.

தற்போது கன்சர்வேட்டிவ் கட்சியின் எம். பியாக இருக்கும் திரு எரிக் ஹென்சென் என்பவர் நீதித்துறை அமைச்சராக இருந்த காலத்தில், டென்மார்க்கில் உள்ள தமிழ் அகதிகளோடு இலங்கையில் இருக்கும் அவர்களின் குடும்பத்தினர் வந்து சேர்வதைத் தடை செய்திருந்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக அமைச்சர் நாடாளுமன்றுக்கு உண்மையைத் தெரிவிக்கவில்லை என்பது அது தொடர்பாக நடத்தப்பட்ட நீதிவிசாரணையின்போது நிரூபிக்கப்பட்டது என்பதும்—

அதனால் ஏற்பட்ட நெருக்கடிகளை அடுத்து டென்மார்க் அரசு கடந்த ஜனவரியில் பதவி விலகியது என்பதும் தெரிந்தவையே. (உ-எ)

# ஆங்கில நெறி பரீட்சைகள்; ஜூலை 31இல் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஜூன் 13

தேசிய தராதரப்பத்திர ஆங்கில நெறி பரீட்சைகள் அடுத்த மாதம் 31ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை கடந்த எட்டாம் திகதி முதல் இம்மாதம் 29ஆம் திகதி வரை பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பரீட்சைக்கு எவரும் தோற்றலாம் என்றும், வயதுக்கட்டுப்பாடு இல்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-3)

# 16 ஆடை தொழிற்சாலைகள் மூடப்பட்டு விட்டனவாம்

முன்னாள் ஜனாதிபதியான பிரேமதாசாவின் திட்டத்தின்படி திறந்து வைக்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலைகளில் பதினாறு தொழிற்சாலைகள் ஏற்கனவே மூடப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவை எப்போது மூடப்பட்டன; மூடுவதற்கான காரணம் என்ன என்பதுகுறித்து தெரியவரவில்லை.

இது இவ்வாறிருக்க—

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா நேரிற் சென்று பார்வையிட்ட 116 ஆடை தயாரிக்கும் தொழிற்சாலைகளில் எத்தனை ஆடை தயாரிப்பில் தற்பொழுது ஈடுபட்டுள்ளன என்பதைத் தம்மால் கூறமுடியாதிருப்பதாக முதலீட்டுச்சபைத் தலைவர் லக்ஷ்மண் வட்டவள தெரிவித்தார்.

16 தொழிற்சாலைகள் ஏற்கனவே மூடப்பட்டுவிட்டன என்பதை அவர் ஒப்புக்கொண்டார். [ஒ-எ]

# ஓய்வூதிய வவுச்சர்களை இங்கே தயாரிக்க வேண்டும்

## அரச அதிபரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ். செயலகத்தில் ஓய்வூதிய வவுச்சர்களைத் தயாரித்து அவற்றுக்கான கொடுப்பனவுகளை உரிய காலத்தில் வழங்க ஏற்பாடுகளை மேற்கொள்ளும்படி நல்லூர் ஓய்வூதியர் நலன்புரிச் சங்கம் யாழ். அரசாங்க அதிபரைக் கேட்டுக்கொண்டுள்ளது.

ஓய்வூதிய வவுச்சர்கள் தற்போது கொழும்பில் தயார் செய்யப்பட்டு வருவதால் கப்பல் மூலம் அவற்றை எடுத்து வருவதில் தாமதம் ஏற்பட்டு ஓய்வூதியர்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் தற்பொழுது குமாரி கப்பல் மூலம் கிடைக்கப்பெற்ற மே, ஜூன் மாத வவுச்சர்களுக்கான கொடுப்பனவுகளை ஒரே முறையில் வழங்குமாறும் அது கேட்டுள்ளது. (க)

# மாணவர் சீருடைத் துணி சந்தையில் விற்பனை!

கொழும்பு, ஜூன் 13

மாணவருக்கு சீருடை வழங்குவதற்காகச் சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட "பப்ளிக்" துணி புறக்கோட்டைப் பகுதி சந்தையில் விற்கப்பட்டு வருவதாக முறையிடப்பட்டுள்ளது.

சீருடைக்கு என்று இறக்குமதி செய்யப்பட்ட சீனத்துணி எவ்வாறு கள்ளச் சந்தையை அடைந்தது என்பது புதிராக இருப்பதாக உள்ளூர் புடைவை வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

44 லட்சம் மாணவருக்கு சீருடை வழங்குவதற்காக கடந்த ஆண்டு பிரேமதாஸா தலைமையிலான அரசு 99 லட்சத்து 70 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான ஒரு கோடி 80 லட்சம் மீற்றர் "பப்ளிக்" துணியை சீனாவில் இருந்து இறக்குமதி செய்திருந்தது.

அதில் ஒரு பகுதியே புறக்கோட்டைச் சந்தையில் விற்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது

இதற்கிடையில் —

200 ஆடை தயாரிக்கும் தொழிற்சாலைத் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட துணிகளில் சுமார் நூறு கொள்கலன்களில் கொண்டு வரப்பட்ட துணிகள் உள்ளூர் சந்தையில் விற்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

# உலகைப் பண்படுத்தும் நூல்களில் தமிழ்மறை திருக்குறள் தலைசிறந்தது

## வள்ளுவர் விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 13

''உலகைப் பண்படுத்து பவை கீதை, பைபிள், திருக்குறள் ஆகிய நூல்களாகும். இவற்றுள் தமிழ் மறையான திருக்குறள் தலைசிறந்தது''.

தமிழீழ திருவள்ளுவர் மன்றத்தின் வள்ளுவர் விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியில் உரையாற்றிய தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் திரு. பிரான்சிஸ் யோசப் அடிகளார் இவ்வாறு கூறினார்.

உரும்பராய் இந்துக் கல்லூரியில் பேராசிரியர் வ. ஆறுமுகம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற மேற்படி விழாவில் தொடர்ந்து பேசிய அவர் கூறியதாவது;

''திருக்குறள் அறிவுப் பசியைப் போக்குகிறது; அன்பை ஏற்படுத்துகிறது; அருளை உருவாக்குகிறது; வீரத்தை வளர்க்கிறது'' என்றார்.

விழாவில் சிறப்புரை ஆற்றிய விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி உரை நிகழ்த்துகையில்:

''வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவங்களைக் கொண்ட திருக்குறள் இன்றைய எமது விடுதலைப் போராட்டத்தின் தேவையையும் உணர்த்தியுள்ளது. கற்பது மட்டும் போதாது. அதன்படி நாம் நிற்க வேண்டும். காலத்தின் தேவையை உணர்ந்து கல்வியைப் பயன்படுத்தி நாட்டுக்கு உதவ வேண்டும்'' என்று கூறினார்.

விரிவுரையாளர் திரு. மா. சின்னத்தம்பி, திரு வே. யுகபாலசிங்கம், உரும்பராய் இந்துக் கல்லூரி அதிபர் திரு. எஸ். பாலசுப்பிரமணியம் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

முன்னதாக குறளகத்தில் இருந்து திருவள்ளுவரின் திருவுருவப்படமும் திருக்குறள் சுவடியும் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டன. மக்கள் வீதிகள் தோறும் பூரண கும்பம் வைத்து மலர்கள் தூவினார்கள். உரும்பராய் இந்துக் கல்லூரி, சைவத் தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றின் சாரணர் குழுவும் அணிவகுப்பு மரியாதை செலுத்தியது.

விழா ஆரம்பத்தில் திரு. இளம்பரிதி, திரு. முதலித்தம்பி ஆகியோர் மங்கள விளக்கேற்றினார்கள். (க-111-154)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராயர் இறைவனால் அளிக்கப்படும் கொடை

## புதிய பேராயர் பதவி அமர்வு வைபவத்தில் கத்தோலிக்க ஆயர் சவுந்தரநாயகம் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 13

பேராயர் இறைவனால் மக்களுக்கு அளிக்கப்பட்ட ஒரு கொடை ஆகும்.

தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் புதிய பேராயர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெபநேசனுக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வளாகத்தில் நேற்று மாலை நடைபெற்றவரவேற்பு விழாவில், யாழ். ஆயர் வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்.

தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் முன்னாள் ஆயர் அதி வண. டேவிட் ஜெயரத்தினம் அம்பலவாணர் அவர்கள் தலைமையில் இந்த விழா நடைபெற்றது.

யாழ். ஆயர் வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

தலைமை மாறும் போது மக்களின் எதிர்பார்ப்புகளும் இருக்கும். இறைவனின் ஆசியுடன் புதிய பேராயர் தன் நற்பணிகளை நிறைவேற்றப் பிரார்த்திக்கின்றேன்.

தென்னிந்திய திருச்சபைக்கும் கத்தோலிக்க திருச்சபைக்கும் இடையில் கடந்த காலங்களில் மிகவும் நெருக்கமான உறவு இருந்து வந்தது.

புதிய பேராயர் கண்டியில் கத்தோலிக்க கல்லூரி ஒன்றில் கல்வி கற்பித்தவர். அவரின் பேராயர் பதவிக் காலத்தில் தென்னிந்திய திருச்சபைக்கும் கத்தோலிக்க திருச்சபைக்கும் இடையிலான உறவுகள் மேலும் இறுக்கமடையும் என எதிர்பார்க்கிறேன்.

புதிய பேராயருக்கு பக்கபலமாக இருந்து நாம் செயற்படுவோம்—என்று கூறினார்.

வைபவத்தில் புதிய பேராயர் உட்பட மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர்.

இந்த வைபவத்துக்கு முன்னர் தென்னிந்திய திருச்சபை வட்டுக்கோட்டைப் பேராலயத்தில் புதிய பேராயர் கலாநிதி ஜெபநேசன் அவர்களுக்கு பதவி அமர்வு விழா சிறப்பாக நடைபெற்றது.

ஆராதனை ஆரம்பத்தில் குருமார்கள் பேராயருடன் ஆலயத்துக்குள் பவனி வந்தனர்.

ஆராதனை முடிவடைந்த பின்னர் புதியபேராயர் நாதஸ்வரம் தவில் இசை முழங்க மாலை மரியாதைகளுடன் வரவேற்பு விழா நடைபெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி வளாகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். (இ)

# கிழிக்கப்பட்ட கடிதங்கள் 10,000 க்கும் மேற்பட்டவை!

யாழ்ப்பாணம், ஜூன் 13

கொழும்பிலிருந்து இம்முறை வந்துசேர்ந்த வெளிநாட்டுத் தபால்களில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவை கிழிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளதாக தபாற் பகுதி வட்டாரங்களில் இருந்து தெரிய வந்தது.

கடந்த காலங்களை விட இம்முறையே மிகப் பெரும் எண்ணிக்கையான வெளிநாட்டுக் கடிதங்கள் வாசிக்க முடியாத அளவுக்குக் கிழிக்கப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்முறை மொத்தம் 273 பொதிகளில் வெளிநாட்டுக் கடிதங்கள் வந்து சேர்ந்தன. பதிவுத் தபால்கள் கொண்ட 323 பொதிகளும், உள்நாட்டுத் தபால்கள் அடங்கிய 396 பொதிகளும், 3 பார்சல்களை கொண்ட 31 பொதிகளும் குமாரி கப்பலில் வந்து சேர்ந்தன.

இவற்றை விட இன்னமும் சுமார் 500 தபாற் பொதிகள் கொழும்பில் தேங்கிக் கிடப்பதாக அறியப்படுகிறது. இவை ''குமண''வில் எடுத்து வரப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் 50 ரூபா, 100 ரூபா, 500 ரூபா பெறுமானமுள்ள முத்திரைகள் இம்முறை தாராளமாக வந்து சேர்ந்துள்ளதாகவும்—

யாழ். பிரதம தபாலகத்திலும், சுண்டிக்குளி, வண்ணார்பண்ணை தபாலகங்களிலும் இந்த முத்திரைகளை வாங்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-162-17)

# ஆஸ்பத்திரியிலிருந்து தப்பிய மனநோயாளி விபத்தில் பலி

யாழ்ப்பாணம், ஜூன் 13

மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த மனநோயாளி ஒருவர் அங்கிருந்து வெளியேறிச் சென்று விபத்தொன்றில் சிக்கி காயம் அடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சொர்ணலிங்கம (வயது 43) என்பவரே இறந்தவர் ஆவார்.

இறந்தவர் மூன்று மாதங்களாக மனநோயினால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றும் —

நோய் தீவிரமடைந்ததை அடுத்து கடந்த திங்கட்கிழமை - மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வெள்ளிக்கிழமை இவர் ஆஸ்பத்திரியில் இருந்து எவருக்கும் தெரியாது வெளியேறிச் சாவகச்சேரி பக்மாகச் சென்று கொண்டிருந்த சமயம் நாவற்குழியில் வான் ஒன்றினால் மோதுண்டு மார்புப் பகுதியில் காயம் அடைந்தார்.

இவர் வழிப்போக்கர்களின் உதவியினால் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவரைக் காணாது தேடிய உறவினர்கள் இவரது சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் கண்டு சடலத்தை அடையாளம் காட்டி எடுத்துச் சென்றனர். (இ.15)

## மரண அறிவித்தல்

### P. M. ஞானப்பிரகாசம்

(இளை. ஆசிரியர், சமாதான நீதிபதி, பண்டிதர், கவியரசன்)

மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், படித்த மகளிர் திட்டம் மிருசுவிலை வசிப்பிடமாக கொண்டவருமான பிலிப்பு மூத்ததம்பி ஞானப்பிரகாசம் அவர்கள் 12 06 93 சனிக்கிழமை பிற்பகல் 2 45 மணியளவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற ஆரோக்கியத்தின் அன்புக் கணவரும், எட்வேட் துரைராஜா, ஓய்வு பெற்ற பிரதம லிகிதர், மின்சார இலாகா இராஜயோகம் (ஆங்கில ஆசிரியர், கணேசவித்தியாலயம், எழுதுமட்டுவாழ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதிகள், ஞானசோதி, குலபூஷணம் ஆகியோரின் அன்பு மாமனாரும், விஜி, விஜிதா, பிறேமலதா, பிறேமகாந்தன், பிறேமராஜன், பிறேமதர்சினி, பிறேமசந்திரிக்கா, பிறேமதாஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (13-06 93) மாலை 4 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் மிருசுவில் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:

65, படித்த மகளிர் திட்டம், மிருசுவில். [2082] ஞா. இராஜயோகம் (மகன்)

# வடகொரிய ஏவுகணை

டோக்கியோ, ஜூன் 13

வடகொரியா றொடொங் 1' என்றழைக்கப்படும் புதிய ஏவுகணையை வெற்றிகரமாகப் பரீட்சித்துள்ளது எனவும் இந்த ஏவுகணை ஜப்பானின் மேற்குக் கரையைச் சென்றடையக்கூடியது எனவும் ஜப்பான் அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் அறிவித்துள்ளார்

வடகொரிய ஏவுகணை ஜப்பானுக்கு மேற்கேயுள்ள நோட்டோதீபகற்பத்தை அண்மிய ஜப்பான் கடலில் பரீட்சிக்கப்பட்டது.

ஏவப்பட்ட மூன்று ஏவுகணைகளும் சுமார்550 கிலோமீட்டர் தூரம் சென்று ஜப்பான் கடலில் விழுந்தன என்று இப்பேச்சாளர் கூறினார். [க]

## குடாநாட்டு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டங்களும் இடம்பெறவுள்ளன.

நாளை திங்கட்கிழமை மாலை வேங்கைகளின் புகழுடல்கள் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும்.

மக்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு, வீரச்சாவடைந்த இவ்விரு வேங்கைகளுக்கும் குடாநாடு எங்கும் மக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். குடாநாட்டின் பல இடங்களிலும் அஞ்சலி பதாகைகள் கட்டப்பட்டுள்ளன. (ஓ-15-155)

# எயர்லங்கா விவகாரம்; விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு, ஜூன் 13

எயர் லங்காவின் புதிய பணிப்பாளர் சபை பதவி ஏற்பதற்கு இரு தினங்களுக்கு முன்பதாக, விமான என்ஜின்களைத் திருத்தி அமைக்கும் ஒப்பந்தம் ஒன்றை புதுப்பித்த நடவடிக்கை பற்றி உயர்நிலை விசாரணை ஒன்றை நடத்தும்படி ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா உத்தரவிட்டுள்ளார்.

எயலங்காவின் நிபுணர் குழுவின் சிபாரிசுக்கு முரணாக இந்த ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டதாகத் கூறப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா படுகொலை செய்யப்பட்டதை அடுத்து புதிய ஜனாதிபதி, எயர்லங்கா பணிப்பாளர் சபையைக் கலைத்து புதிய சபையை ஜெனரல் சேபால ஆட்டிகல தலைமையில் நியமித்தார். புதிய சபை மே 21இல் பதவி ஏற்றது. அதற்கு இரு தினங்களுக்கு முன்னர் குறிப்பிட்ட ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஆய்வுக்கான மருந்துகள்: தட்டுப்பாடு ஏற்படலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடப் பிரிவில் ஆய்வு செய்வதற்காக பாவிக்கப்படும் மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக பல தடவைகள் கொழும்பு தலைமைக் காரியாலயத்திடம் தொடர்பு கொண்ட போதும் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்றும்—

கடந்த மாதம் ஆஸ்பத்திரிக்கு தேவையான மருந்து வகைகள் கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டபோதும், ஆய்வு கூட பரிசோதனைக்கான மருந்து வகைள் அனுப்பி வைக்கப்படவில்லை என்றும் ஆய்வு கூடப் பகுதியில் தெரிவிக்கப்பட்டது.

நெருப்புக் காய்சல் பரிசோதனைக்கான "தைபோயிட் அன்ரிசிரம்'' மூட்டுக் காய்சல் ஆய்வுக்கான (S.O.A.T) மருந்து வகைகள் ஆகியனவயே முடிவுடையும் நிலையில் இருந்துவருகின்றன. (இ-15)

## கதிரவெளி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

- மூதூர்), இரண்டாம் லெப். முத்தையன் அல்லது கமல் (காசிப்பிள்ளை சந்திரலிங்கம் - மூதூர்), வீரவேங்கை ஜெவகன் அல்லது மிரேஷ் (இராசரத்தினம் தேவராஜ்-களுவாஞ்சிக்குடி), வீரவேங்கை சுதர்மன் (மூத்துலிங்கம் செல்வராஜ் - களுவாஞ்சிக்குடி), வீரவேங்கை ஆஞ்சநேயன் அல்லது சந்துரு (ஜோன் தேவசகாயம் - களுவங்கேணி) மற்றும் ஆதரவாளரான 64 ஆம் கட்டை மூதூரைச் சேர்ந்த ஜீவன் ஆகியோரே வீரச்சாவு அடைந்தவர்கள் ஆவர் (ஓ)

## சர்வசன...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் கிழக்கில் வாழ்ந்த தமிழர்களில் 80 சத வீதமானோர் வேறு இடங்களுக்கும் இந்தியா போன்ற நாடுகளுக்கும் இடம்பெயர்ந்து விட்டனர்.

இச்சூழ்நிலையில் கிழக்கில் சிங்களவர், முஸ்லிம்கள் மத்தியில் சர்வசன வாக்கெடுப்பை நடத்தி, அவர்களின் கருத்துக்கு ஏற்ப முடிவு எடுத்து அதனை நடைமுறைப்படுத்துவது சாத்தியமாகாது. வடக்கு - கிழக்கில் தமிழர்களே பெரும்பான்மையினராக உள்ளனர். அவர்களின் கருத்தை அறியாமல், இணக்கத்தைப் பெறாமல் இனப் பிரச்சினைக்குச் சாத்தியமான தீர்வு எதனையும் காணமுடியாது; அவ்வாறு இணங் கண்டாலும் நடைமுறைப்படுத்த முடியாது — என்று பி. பி. ஸியின் சிங்களச் சேவையின் கண்ணோட்டத்தில் அரசியல் அவதானிகளை மேற்கோள் காட்டித் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

சிறுபான்மையினர்களின் பிரச்சினையை அவர்களின் கட்சிகளுடனும், தலைவர்களுடனும் பேசியே தீர்க்க வேண்டும். அவர்களின் இணக்கமின்றி தீர்வு காண்பது என்பது வெறும் ஏமாற்றே, சிங்களத் தலைவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதாகும் — என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அல்ஹாஜ் அஸ்ரப் தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் சர்வசன வாக்கெடுப்பு ஆலோசனை இம்மாதம் 18 ஆம் திகதி பாரிஸில் நடைபெற இருக்கும் இலங்கைக்கு உதவும் நாடுகள் கூட்டத்தை ஏமாற்றுவதற்கான உபாயம் என்று அரசியல் அவதானி ஒருவர் வர்ணித்தார். (அ-6)

## பொருள்களின்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கப்பட்டுள்ளது;

மண்எண்ணெய் விலை 55 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது மின் கட்டணம் 50.5 வீதம் உயர்த்தப்பட்டுள்ளது

அதேபோல் டீசல் மற்றும் கோதுமை மா ஆகியவற்றின் விலைகளும் அதிகரிக்கப்படவுள்ளன.

இது குறித்து பி. பி. ஸி. தனது செய்திக் கண்ணோட்டத்தில் கூறியதாவது:-

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனைப் பெறுவதற்காக மக்களின் மன உணர்வுகளைப் பாதிக்கக் கூடிய முடிவுகளை அரசு எடுத்துள்ளது. இதனால் ஏற்படவுள்ள விளைவுகளை எதிர்க்கட்சிகள் தமக்குச் சாதகமாகவே பயன்படுத்தும்.

சர்வதேச நிதி நிறுவனத்திடமிருந்து அடுத்த தொகுதி கடனைப் பெற ஆளும் ஐ. தே. கட்சி இந்த முடிவை எடுத்துள்ளது.

தெற்கில் வாழும் மக்களைப் பொறுத்தவரை முக்கியமானது இலங்கையில் நடைபெறும் இனப் போராட்டமல்ல என்றும் அவர்களின் வாழ்க்கைச் செலாவணிச் சுமையே என்றும் எதிர்க்கட்சிகள் கூறி வருகின்றன.

15 ஆண்டுகளாகப் பதவியிலிருந்தும் ஆளும் ஐ. தே. க. அரசு இப்படியான — மக்களிடம் வரவேற்புப் பெறமுடியாத — விலை அதிகரிப்பு நடவடிக்கைகளைச் செய்ய வேண்டிய நிலையில் இப்போது உள்ளது.

மண்எண்ணெய், டீசல், கோதுமை போன்ற பொருள்களுக்கு இதுவரை வழங்கி வந்த மானியத்தை நிறுத்துவதன்மூலம் வரவு செலவுத் திட்டத்தில் விழுந்துள்ள பற்றாக்குறையை குறைக்கமுடியும் என அரசு நம்புகிறது. — இவ்வாறு பி. பி. ஸி. மேலும் தெரிவித்தது.

கொலையுண்ட ஜனாதிபதி பிரேமதாச ஆரம்பித்த திட்டங்கள் பலவும் இடைநிறுத்தப்படவுள்ளன. நிதி நிபுணர்களின் கருத்துப்படி மாணவர் இலவசமாக வழங்கப்பட்டு வரும் சீருடை, புத்தகங்கள், மதியஉணவு மற்றும் ஜனசவிய திட்டம் முதலியனவும் எதிர்காலத்தில் நிறுத்தப்படக்கூடும் என்றும்—

இந்த நிலைமையை எதிர்க்கட்சிகள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி கொள்ளும் என்றும் ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. (ஓ-5-6)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 13 - 06 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org